ஏற்படுத்திக் கொடுப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு கருணையோடு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்து அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 36, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு, மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

36—

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகக் கட்டடம்

***34872—டாக்டர் ஆர்.டி. அரசு:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செய்யூர் தொகுதி, சித்தாமூர் ஒன்றியம், சித்தாமூரில் உள்ள ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகத்திற்கு கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

சத்துணவு தந்த சரித்திர நாயகன், மன்னாதி மன்னன், மக்கள் திலகம்; புரட்சித் தலைவர், பாரத ரத்னா அவர்களை வணங்கி, தங்கத் தாரகை விருது பெற்ற, உலகத் தலைவர்களில், அமெரிக்க ஐக்கிய நாடுகளின் சபை முன்னாள் செயலாளர் Kofi Annan, *ரஷ்ய நாட்டின் அதிபர்* Vladimir Putin, *அயர்லாந்து நாட்டின் அதிபர்* David Anderson *ஆகியோர் வரிசையில், தங்கத் தாரகை விருது பெற்ற உலக முதல் பெண் தலைவரும், (மேசையைத் தட்டும் ஒலி) 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என்று வாழ்ந்து தன் இன்னுயிர் ஈந்து, தாலிக்குத் தங்கம் திட்டத்தின்மூலம் 12,50,705 மகளிர் வாழ்க்கையில் உயர் கல்வியை ஊக்குவித்து, இன்று தமிழகம் உயர் கல்வியில் இந்தியாவிலேயே முதன்மை இடத்திற்கு வருவதற்கு உறுதுணையாக திட்டத்தினை வழங்கி, எனக்குப் பின்னாலும் இன்னும் எத்தனை நூற்றாண்டுகளானாலும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மக்கள் பணி செய்யும் என்று கழக உடன்பிறப்புகளுக்கு அன்பு ஆணையிட்டு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் அருகில் துயில்கொண்டு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்*

2021 பிப்ரவரி 26]

கழகம் என்னும் இயக்கத்தையும், புனித ஆட்சியையும் கட்டிக் காத்துவரும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். முக்காலமும் உணர்ந்து, மூத்தோர் மனதை வென்று, மக்களின் முதல்வராக, இந்தியத் திருநாட்டின் முதன்மை முதலமைச்சராகத் திகழ்ந்து, வரும் 2021 ஆம் ஆண்டில் தமிழக மக்களின் பேராதரவோடு மீண்டும் முதலமைச்சராகப் பதவியேற்கவுள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) *தென்பாண்டிச் சிங்கம், அமைதியின் வடிவம், அன்பின் உருவம், ஜல்லிக்கட்டு நாயகன், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.*

"சொற்கோட்டம் இல்லது செப்பம் ஒருதலையா
உள்கோட்டம் இன்மை பெறின்"

என்ற தெய்வப் புலவரின் வாக்கிற்கிணங்க, நேர்மையும், நெஞ்சுறுதியும் ஒருவருக்கு இருந்தால், அவரது சொல்லில் நீதியும், நியாயமும் இருக்கும் என்பதற்கு அடையாளமாக, சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் சம வாய்ப்பினைத் தந்து, தங்களது கருத்துகளை தடையின்றி எடுத்துக்கூற வைத்து, அறம் வழுவாது, நடுநிலை தவறாது செயல்படும் ஜனநாயகக் காவலர், மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களை வணங்குகிறேன்.

முற்பகல் 10–55

அம்மாவின் அரசுக்கு வலு சேர்க்கும் மின்மிகை நாயகன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களை வணங்குகிறேன். உள்ளாட்சியில் நல்லாட்சி நடத்திவரும் மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் அனைவருக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

சித்தாமூர் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகம் தற்போது காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவரால் ஒதுக்கீடு செய்யப்பட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள வட்டார சேவை மையக்

கட்டடத்தில் செயல்பட்டு வருவதால், புதிதாக சொந்தக் கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு அவர்கள், இருக்கையில் இல்லை.

வினா வரிசை எண் 37, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

37—

கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்

***53309—திரு. பி.எம். நரசிம்மன்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி தொகுதி, பள்ளிப்பட்டு ஒன்றியம், குமாரமங்கலம் கிராமத்தில் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இந்த அவையில் எதிர்க்கட்சி வரிசையைப் பாருங்கள். ஓர் எதிர்க்கட்சி உறுப்பினர்கூட இல்லை. அண்ணன் எடப்பாடியார் அவர்களின் கண்ணுக்கு எட்டிய தூரம் வரை எதிரிகளே இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அவையில் எதிர்க்கட்சிக்கு வருங்காலங்களிலும் இடமில்லை என்பதற்கான அடையாளம் இது. எடப்பாடியார் அவர்களின் மக்கள் நலத் திட்டங்களுக்கான அதிரடி அறிவிப்புகளைக் கண்டு, பயந்து, மிரண்டுபோய் ஓட்டம் பிடித்திருக்கிறார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்கள் சிங்கமாக இந்த அவைக்குள்ளே வருகிறார்களென்றால், சிதறி ஓடியவர்கள், அம்மாவின் சிங்கக்குட்டி எடப்பாடியாரின் எதிரே அமர, உட்கார பயந்து